செ.வெ.எண்.33 நாள்: 12-09-2017

## பத்திரிக்கை விளம்பரம்

திருநெல்வேலி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகத்தில் 6 நபர்களும், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கப் பிரிவில் 1 பணியாளரும், வட்டார அளவிலான கணினி இயக்குநர் 4 நபர்களும் வெளிப்பணியாளர்கள் (Out Sourcing) அடிப்படையில் பணிக்கு நபர்களை அனுப்புவதற்கான நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக, தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பும் நிறுவனங்கள் கீழ்க்காணும் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. இவ்வலுவலக பணிக்கு நபர்களை அனுப்ப நிறுவனத்துடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் ஒருவருட காலத்திற்கு மட்டுமே ஆகும்
2. நிறுவனம், பணிக்கு நபர்களை அனுப்பும் பணியில் குறைந்தபட்சம் ஐந்து வருடம் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
3. அலுவலகத்தில் பல்வேறு நிலைகளுக்கு நபர்களை பணிக்கு அனுப்பவும், அவர்களுக்கு பயிற்சியளிப்பதையும், நிறுவனம் பொறுப்பேற்கவேண்டும்.
4. காலியிடங்கள் உருவாகும் போதும், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும் போதும், அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் கோரிக்கையின் அடிப்படையில் நபர்களை அனுப்ப நிறுவனம் பொறுப்பேற்க வேண்டும்.
5. நிறுவனமே, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு ஊதியத்தை வழங்கவேண்டும். அதன்பின்னர் இவ்வலுவலகத்திலிருந்து அத்தொகை மீள வழங்கப்படும்.
6. நிறுவனம், தான் அனுப்பிய பணியாளர்களின் பணித்திறன் குறித்து குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவ்வலுவலகத்திலும் இது குறித்து சந்தித்து பணித்திறனை முன்னேற்ற வேண்டும்.
7. அனுப்பப்பட்டுள்ள நபர்களின் பணி திருப்தியளிக்காதபட்சத்தில் அந்நபர்களை நிறுவனம் திரும்ப பெற்றுக் கொண்டு அலுவலக கோரிக்கையின் அடிப்படையில் 10 நாட்களுக்குள் மாற்று நபர்களை அனுப்ப வேண்டும்.
8. அரசால் ஏதாவது பணியிடம் ரத்து செய்யப்பட்டால் அவ்வாறான பணியிடங்களில் பணிபரிபவர்களை நிறுவனம் திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும்.
9. பணியாட்களால் அரசுக்கு ஏதாவது இழப்பு ஏற்பட்டால் அதனை நிறுவனம் பொறுப்பேற்று செலுத்த வேண்டும்.

10. இவ்வலுவலகத்தில் ஊதியமாக வழங்கப்படும் தொகையில் நிறுவனம் எந்தவித பிடித்தமும் செய்யாது பணியாட்களுக்கு வழங்க வேண்டும்.

11. நிறுவனம் 5-ம் தேதிக்குள் தவறாது ஊதியத்தை வழங்கிட வேண்டும். அலுவலகத்திலிருந்து தொகை வழங்கிய பின்புதான் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என தாமதப்படுத்தக்கூடாது. பணியாளர்கள் ஊதியத்திற்கும், அலுவலகத்திற்கும் நேரடி தொடர்பு கிடையாது.

12. தேர்வு செய்யப்படும் நிறுவனம் குறைந்தபட்சம் ஒருமாத மொத்த ஊதியத் தொகையை தனது வங்கி இருப்பாக காண்பிக்க வேண்டும். அதற்கான வங்கி பாஸ்புத்தக நகல் அத்தாட்சியாக இணைக்கப்பட வேண்டும்.

13. இது தவிர அரசு மற்றும் இவ்வலுவலகத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதிமுறைகளுக்கு நிறுவனம் கட்டுபட்டே செயல்பட வேண்டும்.

14. தேர்வு செய்யப்பட்ட நிறுவனம் ரூ.50-க்கான முத்திரைதாளில் இவ்வலுவலத்தில் எழுத்து மூலமான ஒப்பந்தத்தை ஒப்புதல் செய்து கொள்ள வேண்டும்.

15. நிறுவனத்தின் செயல்பாடுகள் திருப்தியளிக்காத பட்சத்தில் எந்த நேரமும் காரணம் தெரிவிக்காமல் நிறுவனத்தினுடைய ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | : | 20.09.2017 முற்பகல் 11.00 மணிக்குள் |
| விண்ணப்பங்களை திறக்கும் நேரம் | : | 20.09.2017 நண்பகல் 12.00 மணி |
| விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி | : | திட்ட இயக்குநர்,<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம்,<br>காவல் ஆணையர் அலுவலக<br>பழைய கட்டிடம் (முதல் தளம்),<br>திருநெல்வேலி - 627 009<br>தொலைபேசி எண்.0462-2500302. |

மேற்கூறிய விவரங்கள் தொடர்பாக ஏதேனும் ஐயப்பாடு இருந்தால் மேற்கூறிய முகவரியில் அலுவலக வேலை நாட்களில், வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.